DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No.33/19 |
| Deposition of Witness for Prosecution | DW1 |
| Cr.No. and Police Station : | Cheque case |
| Name: | திரு. சேகர் |
| Father's /Husband Name: | த.பெ. ஜெகநாதன் |
| Village: | வீரமுடையான் நத்தம் |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 07.07.2026** | |

**முதல் விசாரணை :**

இந்த வழக்கின் மனுதாரர் ஆன முருகன் என்பவர் என் ஊரின் பக்கத்து ஊர்க்காரர். நான் நெல்வியாபாரி. என்னிடம் கணக்கு பிள்ளையாக மனுதாரர் முருகன் 2018 ம் ஆண்டு வேலைக்கு சேர்ந்தார். 2018 ம் ஆண்டு 2 மாதங்கள் மட்டும் நெல் வியாபாரம் சம்பந்தமான கணக்கு வழக்குகளை முருகன் பார்த்துக் கொண்டார். முருகன் அவ்வாறு வேலை பார்த்தற்கு நாள் ஒன்றிற்கு ரூ.500 , சாப்பாட்டு செலவும் கொடுத்துள்ளேன். தேதி நினைவில்லை. ஒரு நாள் 2018 ம் ஆண்டு ஒரு நாள் நான் நெல் வியாபாரத்திற்காக இளவரசன் என்பவரிடம் பணம் எடுத்துக் கொடுக்குமாறு முருகனிடம் காசோலை கொடுத்தேன். காசோலை எண் நினைவில்லை. முருகன் அந்த காசோலையை பயன்படுத்தி பணம் எடுத்துக் கொடுக்கவில்லை. பிறகு இளவரசன் என்னிடம் நேரடியாக வந்து ரூ.1 லட்சம் பணம் பெற்றுக் கொண்டார். நான் இளவரசன் என்பவரிடம் முருகனிடம் கொடுத்த காசோலையை வாங்கி தருமாறு கேட்டேன். இளவரசன் வாங்கி தருவதாக சொன்னார். முருகன் நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டார் என்றும் காசோலையை வாங்கி தருமாறு மீண்டும் கூறினேன். இளவரசன் எனக்காக இந்த வழக்கில் சாட்சி சொல்வதாக சொல்லியுள்ளார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் கோரப்பட்டு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram